**செய்தி வெளியீடு எண்: 07** **நாள்: 07.01.2013**

**செய்தி வெளியீடு**

பொருளாதார வளர்ச்சிக்கும், மனித வள மேம்பாட்டிற்கும், கல்வி மிகவும் இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, கல்வி வளர்ச்சிக்கென பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தில் பிற்படுத்தபட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அதிகமாக வசிக்கும் பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்த மக்களின் நலனுக்காக 24 மேல்நிலைப் பள்ளிகள், 25 உயர்நிலைப் பள்ளிகள், 25 நடுநிலைப் பள்ளிகள், 211 ஆரம்பப் பள்ளிகள் என மொத்தம் 285 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 37,556 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

ஏற்கெனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பிரமலை கள்ளர் வகுப்பைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் அதிக அளவில் கல்வி பயிலுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, மதுரை மாவட்டம் பெருமாள்பட்டி, தேனி மாவட்டம் கருவேல்நாயக்கன்பட்டி மற்றும் பொ.மீனாட்சிபுரம் ஆகிய 3 இடங்களில் உள்ள அரசு கள்ளர் துவக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், மதுரை மாவட்டம் கரடிக்கல் மற்றும் முத்துப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் சித்தர்கள் நத்தம் ஆகிய 3 இடங்களில் உள்ள அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், தேனி மாவட்டம் மார்க்கையன் கோட்டை மற்றும் முத்தணம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் சென்னமநாயக்கன்பட்டி ஆகிய 3 இடங்களில் உள்ள அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும் ஆணையிட்டார்கள்.

தற்பொழுது, மதுரை மாவட்டத்திலுள்ள செக்கானூரணியில் உள்ள அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து 6-ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுமியருக்கு என தனியே செக்கானூரணியில் அரசு கள்ளர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இப்பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்காக 2.02 கோடி ரூபாயும், ஆய்வக மற்றும் விளையாட்டு உபகரணங்கள், மேசை, நாற்காலி மற்றும் பீரோ போன்ற தளவாட சாமான்கள் வாங்குவதற்காக 20 லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 2 கோடியே 22 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாப்பதிலும், அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

ஏற்கெனவே உலமா ஓய்வூதியத்தினை 1,000 ரூபாயாக உயர்த்தியும், பயனாளிகள் எண்ணிக்கையை 2,600 ஆக உயர்த்தியும், வக்ஃப் வாரியத்தின் நிதிப் பற்றாக்குறையை சமாளிக்க அரசு மானியத்தை 1 கோடி ரூபாயாக உயர்த்தியும், ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த ஓய்வூதியப் பலன்களை வழங்க சிறப்பு நிதியாக 3 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியும், ஹஜ் குழுவிற்கு வழங்கும் மானியத்தை 20 லட்சமாக உயர்த்தியும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதேபோன்று, தற்பொழுது பள்ளிவாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சிறப்புப் பணி மேற்கொள்வதற்காக, மாநில அளவில் வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதி ஒன்றினை துவக்குவதற்கும், இதற்கு தேவையான நிதியினை கொடையாளர்களிடமிருந்து பெறுவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த நிதிக்கு அரசு மானியமாக 2012-13 ஆம் நிதியாண்டில் 3 கோடி ரூபாய் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

********

வெளியீடு: - இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :– 7.1.2013.